பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182



# தினப்புயல்

PTN news THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06



கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.

T.P- 0770457661



மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 57


## ஊரடங்கு உத்தரவு நாளை காலை 07 மணி வரை நீடிப்பு

நாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது. முன்னதாக இன்று (11) காலை 07 மணி வரையில் ஊரடங்கு உத்தரவு அமுலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் நாளை காலை 07 மணி வரை ஊரடங்கு உத்தரவு இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

அதிகாரமளிக்கக்கூடிய அதிகாரியினால் வழங்கப்படும் எழுத்து மூல அனுமதி பத்திரத்தை தவிர பொது வீதிகளில், ரயில் வீதிகளில், பூங்காக்களில், பொது மைதானங்களில் மற்றும் பொது இடத்தில் அல்லது கடற்கரையில் தங்கியிருக்க அனுமதியில்லை என ஜனாதிபதி ஊடக பிரிவு அறிவித்துள்ளது.



## மக்களை பாதிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது

மக்களை பாதிக்கும் வகையில் எவ்வித மின்வெட்டும் மேற்கொள்ளப்படாது என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களை ஒடுக்கும் வகையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என அதன் தலைவர் அனில் ரஞ்சித் தெரிவித்துள்ளார். மின் இணைப்பை துண்டித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக சமூக வலைதளங்களில் பரவி வரும் வதந்திகள் உண்மைக்குப் புறம்பானது என்றும் அனில் ரஞ்சித் தெரிவித்தார்.

'மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் மின் இணைப்பை துண்டிக்கும் எண்ணம் எப்பொழுதும் எமக்கு இருந்ததில்லை. நாம் அனைவரும் வெளியேறினால் நிச்சயமாக மின்சாரம் துண்டிக்கப்படும். ஆனால் அத்தகைய செயலை நாம் செய்யப்போவதில்லை. ஏனெனில் இந்த நேரத்தில் மின்சாரத்தை பராமரிப்பது மிகவும் முக்கியமாகும். ஏனென்றால் எவராலும் ஃபோன் ஒன்றை சார்ஜ் செய்யவோ, பேசவோ, எதையும் செய்யவோ முடியாது போகும். அதனால்தான், எக்காரணம் கொண்டும் மின்வெட்டை அனுமதிக்க மாட்டோம் என்று தெளிவாகக் கூறுகிறோம்.' எனத் தெரிவித்துள்ளார்.

**இன்றைய தினம் நடக்கவிருந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தை ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**அதன் அடிப்படையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெறவுள்ளது.**

**பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு காரணமாக இவ்வாறு ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக சந்திக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

## இலங்கை ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிவிப்பு

அதிபர் ஆசிரியர்கள் மறு அறிவித்தல் வரை கடமைக்கு வரமாட்டார்கள் என்பதுடன், இன்றைய அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் குறித்து சமயோசிதமாக செயற்படுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் ஆ. தீபன் திலீசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில், காலிமுகத்திடல் போராட்டம் மீதான அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு, இதன் மூலம் முழுமையான இராணுவ ஆட்சியை உருவாக்கும் நோக்கிலேயே கோட்டாபய அரசாங்கம் செயற்படுகிறது. தமது ஆட்சிக்கான அதிகார போதையில், சிங்கள மக்களுக்கு பொய்களைக் கூறிய ஆட்சியாளர்கள் – தமிழினத்தை இனவழிப்புச் செய்து இன்று தன் சொந்த இனத்தின் ஜனநாயக போராட்டங்களையே நசுக்க முனைந்து, பாரிய வன்முறைச் சம்பவங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

கட்டுமீறிய இன்றைய சூழலில், இந்த கொலைகார, ஊழல், அடக்குமுறை ஆட்சியாளர்கள் மக்கள் மட்டத்திலிருந்து அகற்றப்பட்டு தண்டிக்கப்படவேண்டும். எனவே ஜனாதிபதி கோட்டாபய உள்ளிட்ட அரசாங்கம் அகற்றப்படும் வரையில் அனைத்து தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தை தொடரவுள்ளோம். இதன்படி அனைத்து ஆசிரியர்கள், அதிபர்கள் மே 10 ஆம் திகதி முதல் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம் என்பதையும் – பணிப்பகிஸ்கரிப்பின் போது, விடுமுறை தொடர்பாக விண்ணப்பிக்கவோ அல்லது விடுப்பு குறித்து அறிவிக்கவோ வேண்டியதில்லை என்பதையும் அறியத்தருகின்றோம். எனவே அதிபர் ஆசிரியர்கள் மறு அறிவித்தல் வரை கடமைக்கு வரமாட்டார்கள் என்பதுடன், இன்றைய அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் குறித்து சமயோசிதமாக செயற்படுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

ලංකා ගුරු සංගමය
இலங்கை ஆசிரியர் சங்கம்
CEYLON TEACHERS' UNION

## கொழும்பு மத்தி ரோட்டரி (Rotary club of Colombo Mid town) கழகத்தினால் பாடசாலைகளுக்கு கணனிகள் அன்பளிப்பாக வழங்கி வைப்பு

(பாறுக் ஷிஹான்)

கொழும்பு மத்தி ரோட்டரி (Rotary club of Colombo Mid town) கழகத்தினரால் கல்முனை கல்வி வலயபிரிவில் உள்ள இருபாடசாலைகளுக்கு கணனிகள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை விருத்தி செய்யும் முகமாக பாடசாலைகளின் வேண்டுகோளுக்கிணங்க குறித்த கணனிகள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது கமு/கமு/மல்ஹறுஸ் ஸ்ம்ஸ் மகா வித்தியாலயத்துக்கு (தேசிய பாடசாலை) 10 கணனிகள் அன்பளிப்பாக பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.ஐ.மதனி அவர்களிடம் கொழும்பு மத்தி ரோட்டரி (Rotary club of Colombo Mid town) கழகத்தினரால் பாடசாலையில் வைத்து இன்று கையளிக்கப்பட்டது.

இதேவேளை கல்முனை-அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்திற்க்கும் குறித்த கொழும்பு மத்தி ரொட்டரி கழகத்தினரால் (Rotary club of Colombo Mid town) 10 கணனிகள் அன்பளிப்பாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.அப்துல் ரஸாக் அவர்களிடம் பாடசாலைக்கும் கையளிக்கப்பட்டது.

கொழும்பு மத்தி ரொட்டரி (Rotary club of Colombo Mid town) கழகத்தின் தலைவர் அர்சாட் ஜமால்ட்டீன், கொழும்பு மத்தி ரொட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர்களான இம்தியாஸ் இஸ்மாயில், ஜி.எஸ் சில்வெஸ்டர், நுஹ்மான் சிராஜூதின், அஸ்வான் பங்சஜயா மற்றும் சாய்ந்தமருது கோட்டக் கல்வி அதிகாரி என்.எம்.ஏ.மலிக், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள்.என பலரும் இதன் போது கலந்துகொண்டனர். மேலும் மாணவர்களின் நலன் கருதி குறித்த உதவியை செய்தமைக்கு பாடசாலை சமுகம் சார்பில் குறித்த கொழும்பு மத்தி ரொட்டரி கழகத்திருக்கு பாடசாலை அதிபர்கள் நன்றியினை இதன்போது தெரிவித்தனர்.





## O/L பரீட்சை இடம்பெறும் திகதி குறித்த அறிப்பு

க.பொ.த சாதாரணதர பரீட்சைகளை ஒத்திவைக்க எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது போன்று பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கான நேர அட்டவணை ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த நிலையில் எதிர்வரும் 23 ஆம் திகதி சாதாரண தர பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி நிறைவடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவத் தளபதி மற்றும் பொலிஸ் மா அதிபர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைப்பு

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பொலிஸ் மா அதிபர் சி.டி விக்ரமரத்ன இன்று (11) மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளார். இருவரையும் இன்று காலை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 9 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற கலவரத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக இருவரையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் பல துப்பாக்கிச் சூடு சம்பவங்களும் பதிவாகியுள்ளமை குறித்து மனித உரிமைகள் ஆணையத்திடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.





## இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து இந்தியா அறிக்கை

இலங்கையின் மிகவும் நெருங்கிய நட்பு நாடென்ற ரீதியிலும் வரலாற்று ரீதியான உறவுகளின் அடிப்படையிலும் அதனுடைய (இலங்கையின்) ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சி ஆகியவற்றுக்கு இந்தியா பூரணமான ஆதரவை வழங்குவதாக இந்தியா தெரிவித்துள்ளது. கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளது.

அயலுறவுக்கு முதலிடம் என்ற எமது கொள்கைக்கு முக்கியத்துவமளித்து இலங்கையில் தற்போது காணப்படும் நெருக்கடிகளிலிருந்து அம்மக்கள் மீட்சி பெறுவதற்கு ஆதரவளிப்பதற்காக இந்த ஆண்டில் மாத்திரம் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவி இந்தியாவால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக உணவு, மருந்து போன்ற அத்தியாவசியப்பொருட்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக இந்திய மக்களும் உதவிகளை வழங்கியுள்ளனர். ஜனநாயக செயற்பாடுகள் ஊடாக வெளிப்படுத்தப்படும், இலங்கை மக்களின் சிறந்த நலன்களின் அடிப்படையில் இந்தியா எப்பொழுதும் தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## உக்ரைனில் அறிவிக்கப்பட்டதை விட அதிகமான மக்கள் உயிரிழப்பு- ஐநா அறிவிப்பு

உக்ரைன் மீதான ரஷ்யா படையெடுப்பு 77ஆவது நாளாக நடைபெற்று வருகிறது. இந்த போரில் உக்ரைன் பொதுமக்களில் இதுவரை 3,381 பேர் உயிரிழந்ததாக அரசின் அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் உக்ரைன் போரில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதைவிட அதிகமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்திருக்கலாம் என்று ஐ.நா மனித உரிமைகள் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் உக்ரைன் விவகார கண்காணிப்புப் பிரிவு தலைவர் மாடில்டா பாக்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, உக்ரைனில் ரஷ்யா நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு வருகிறோம். ஆனால், அந்த எண்ணிக்கை தற்போது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையைவிட ஆயிரக்கணக்கில் அதிகமாக இருக்கும் என்பதை மட்டும் என்னால் கூறமுடியும்.

மரியுபோல் நகரில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்பதை அங்கு நேரில் சென்று தெரிந்துகொள்ள முடியாத காரணத்தினால், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் உயிரிழப்பு எண்ணிக்கை உண்மை நிலவரத்தைவிட மிகக் குறைவாக இருக்கிறது என மாடில்டா பாக்னர் தெரிவித்தார்.

## பாகிஸ்தானில் சர்க்கரை ஏற்றுமதிக்கு முழுத் தடை

பாகிஸ்தானில் கொரோனா பாதிப்பு, ஊரடங்கு கட்டுப்பாடுகளால் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டு மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். இந்த சூழலில், உள்நாட்டு தேவை அதிகரித்து வருவதால், சர்க்கரை ஏற்றுமதிக்கு பாகிஸ்தான் முழு தடை விதித்துள்ளது என்று அந்த நாட்டின் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் நேற்று தெரிவித்தார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "உள்நாட்டு தேவையை கருத்தில் கொண்டு, சர்க்கரை ஏற்றுமதியை முழுமையாக தடை செய்து உத்தரவிட்டுள்ளேன். சர்க்கரை கடத்தல் மற்றும் பதுக்கலுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தங்கள் கடமைகளில் அலட்சியமாக இருப்பவர்கள் மீது சகிப்புத்தன்மை காட்டப்படாது. தனது உத்தரவுகளை அமல்படுத்துவது குறித்த விவரங்களை உடனுக்குடன் தனக்குத் தெரிவிக்கும்படி சம்பந்தப்பட்ட துறைகளிடம் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் கேட்டுக் கொண்டுள்ளார். உணவுப் பொருட்களின் ஏற்றுமதி மீதான தடை என்பது, நாட்டில் அதன் விலையை உயராமல் தடுக்கும் நோக்கம் கொண்டது என்று அரசின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



